

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உடல்நலக்குறைவால் இயற்கை எய்திய அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் பீலா வெங்கடேசன் அவர்களின் இல்லத்திற்கு நேற்று (25.9.2025) நேரில் சென்று, அவரது உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் கே.என்.நேரு, திருமதி பி.கீதாஜீவன், மா.சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர் அரவிந்த் ரமேஷ், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், அரசு துறைச் செயலாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

## மணலி – எண்ணூர் பகுதிகளில்

# தூசி மாசுபாட்டைக் கட்டுப்படுத்த - இயந்திர சாலை துடைப்பான்கள்!

## அமைச்சர் தங்கம் தென்னரசு தொடங்கி வைத்தார்!

சென்னை, செப்.26-

மணலி மற்றும் எண்ணூர் பகுதிகளில் தூசி மாசுபாட்டை கட்டுப்படுத்தவும் தூய்மையான சுற்றுசூழலை உருவாக்கவும் அவசரநிலை நடவடிக்கை மையம் மற்றும் இயந்திர சாலை துடைப்பான்கள் நேற்று (25.09.2025) துவக்கி வைக்கப்பட்டது.

சென்னை மணலியில் அவசரநிலை நடவடிக்கை மையம் மற்றும் நவீன இயந்திர சாலைதுடைப்பான்களை தொடங்கி வைத்து தமிழ்நாடு அரசு காற்று மாசுபாட்டை எதிர்த்துப் போராடும் முயற்சியில் ஒரு மைல் கல்லை எட்டியுள்ளது.

மணலி - எண்ணூர் மறுசீரமைப்பு மற்றும் புத்துயிர் அமைப்பு மன்றம் (MERRC) என்ற சிறப்பு நிறுவனம் நிறுவப்பட்டு இந்த மாதம், தமிழ்நாடு நிதி, சுற்றுசூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் மூலம் அதிகாரபூர்வமாக தொடங்கப்பட்டது.

இம்மன்றம் பசுமை திட்டங்களை செயல்படுத்த, நீர் நிலைகளை புதுப்பிக்க, திடக் கழிவுகளை நிர்வகிக்க, மாசுபாட்டை குறைக்க, மற்றும் சமுதாய அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்டது.

இந்த அமைப்பின் கீழ், ஒரு தனித்துவமான கண்காணிப்பு அமைப்புடன் கூடிய அவசர நிலை நடவடிக்கை மையம் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் தொழிற்சாலை குறித்த தரவுகள், இசைவாணை மேலாண்மை, நிகழ்நிலை உமிழ்வு/கழிவுநீர் கண்காணிப்பு அமைப்புகள், சுற்றுச்சூழல் காற்றுத்தரக் கண்காணிப்பு நிலையங்கள் குறித்த தரவுகள் இணைக்கப்பட்டுள்ளன.

இந்த அவசரநிலை நடவடிக்கை மையம், அவசர சூழ்நிலைகளில், ஒரு ஒருங்கிணைப்பு நிலையமாக செயல்பட்டு, தக்க நேரத்தில் முடிவெடுக்க, முக்கிய துறைகளான வருவாய் துறை, தொழிலாளர் பாதுகாப்பு & சுகாதாரத் துறை, சென்னை மாநகராட்சி, தீயணைப்பு துறை, காவல் துறை, மீன்வளத் துறை, சுகாதாரத் துறை, சென்னை குடிநீர் வாரியம், காமராஜர் துறைமுகம் ஆகியோருடன் இணைந்து செயல்படும்.

மாநில நிதி மற்றும் சூழல், காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு இயந்திர சாலை துடைப்பான்களை தொடங்கி வைத்து, பசுமை மரம் நடுதல் நிகழ்வையும் தொடங்கி வைத்தார். இது இந்த பகுதிகளில் விரிவாக பசுமை வளர்ப்பு திட்டங்களுக்கு ஊக்குவிக்கும் விதமாக அமைந்துள்ளது.

நிதி, சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு இயந்திர துடைப்பான்கள் மற்றும் சாலையோர மரம் நடுதல் நிகழ்வை, டாக்டர் கலாநிதி வீரசாமி எம்.பி. கே.பி. சங்கர், எம்.எல்.ஏ., திருமதி சுப்ரியா சாஹூ, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், சுற்றுசூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை அவர்களின் முன்னிலையில் தொடங்கி வைத்தார். இந்த முயற்சி, மணலி எண்ணூர் பகுதிகளில் விரிவாக பசுமை திட்டப்பணிகளை மேற்கொள்வதற்கு வழி வகுக்கும்.

இத்திட்டத்திற்காக தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் (TNPCB), பெருநகர சென்னை மாநகராட்சிக்கு நிதி வழங்கியுள்ளது. இந்த இயந்திரங்கள் தொழிற்சாலைகள் அதிகம் உள்ள மணலி பகுதியில் தூசி மாசுபாட்டை குறைத்து, மக்களின் ஆரோக்கியத்தையும் வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்த உதவும்.

இம்முயற்சியின் கீழ், மண் பசுமையாக்குதல், காற்றை தூய்மையாக்குதல் மற்றும் சமூகங்களை திறனூட்டுதல் போன்ற ஒருங்கிணைந்த அணுகுமுறையின் மூலம், தமிழ்நாடு அரசு, மாநிலத்தின் நகர்ப்புற சூழலியல் மேலாண்மை மற்றும் காலநிலையை பாதுகாப்பை உறுதி செய்துள்ளது.

இந்த நிகழ்வில், அனுராக் மிஸ்ரா, சிறப்பு செயலாளர், சுற்றுசூழல் காலநிலை மாற்றத்துறை, முனைவர். ஜெயந்தி. தலைவர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், உறுப்பினர் செயலர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், சென்னை மாநகராட்சியின் மூத்த அதிகாரிகள், மணலி தொழிற்சங்கத்தினர்கள் பங்கேற்றனர்.

## "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமில்

# 7427 முகாம்களில் 55.55 இலட்சம் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, செப்.26-

**மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் நேற்று (25.09.2025) கோடம்பாக்கம் மண்டலம், வார்டு 140, மேற்கு மாம்பலம், மேட்டுப்பாளையம் எத்திராஜ் நகர், கோடம்பாக்கம் சாலையில் உள்ள வி.கே.எம். மஹாலில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமினைப் பார்வையிட்டு, பொதுமக்களின் கோரிக்கைகளுக்கான தீர்வினை வழங்கி, அங்கு அமைக்கப்பட்டுள்ள முகாமில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சிகிச்சைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.**



பிறகு அமைச்சர் மா. சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

**"உங்களுடன் ஸ்டாலின்" முகாம்**

தமிழ்நாட்டில் முதலமைச்சர் அவர்களால் பல்வேறு மக்கள் நலன் சார்ந்த திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் "உங்களுடன் ஸ்டாலின்" எனும் மகத்தான திட்டமும், "நலம் காக்கும் ஸ்டாலின்" எனும் திட்டமும் மிகப் பெரிய அளவில் மக்களை ஈர்த்திருக்கிறது.

உங்களுடன் ஸ்டாலின் எனும் திட்டம் 2025 ஜூலை திங்கள் 15-ஆம் தேதி முதலமைச்சர் அவர்களால் சிதம்பரம் நகராட்சியில் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த திட்டத்தில் 10,000 முகாம்கள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. நகர்ப்புற பகுதிகளில் 3,768 முகாம்களும், ஊரகப் பகுதிகளில் 6,232 முகாம்களும் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

நகர்ப்புறங்களைப் பொறுத்தவரை 3768 முகாம்களில் 43 வகையான சேவைகளை 13 துறைகளின் வாயிலாக அளிப்பது என்றும், ஊரகப்பகுதிகளைப் பொறுத்தவரை 15 துறைகளின் வாயிலாக 46 சேவைகள் என்றும் அறிவிக்கப்பட்டது.

இதில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, எரிசக்தித்துறை, கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, சிறுகுறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை என்று 13 துறைகள் என 43 சேவைகள் தருகின்ற முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது.

அந்த வகையில் தமிழ்நாடு முழுவதிலும் ஒவ்வொரு மாதத்திற்கும் 3,000 முகாம்கள் என திட்டமிடப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஜூலை 15 ஆம் தேதி முதல் ஆகஸ்ட் 14 ஆம் தேதி வரை 3,561 முகாம்களும், ஆகஸ்ட் 15 முதல் செப்டம்பர் 14 வரை 2,859 முகாம்களும், செப்டம்பர் 15 முதல் அக்டோபர் 14 வரை 2,773 முகாம்களும், அக்டோபர் 15 முதல் நவம்பர் 14 வரை 807 முகாம்கள் என்று ஆக மொத்தம் 10,000 முகாம்கள் நடத்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இதுவரை தமிழ்நாடு முழுவதிலும் 7,427 முகாம்கள் நடத்தப்பட்டு, 55,55,917 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளது. முகாம்களிலேயே அவர்களுடைய கோரிக்கையினை சேவை துறைகள் நிவர்த்தி செய்து வருகின்றன.

பெருநகர சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரை இதுவரை 323 முகாம்கள் நடைபெற்று முடிந்திருக்கிறது. இந்த முகாம்களில் 5,45,607 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளது. அந்த வகையில் இந்த விண்ணப்பங்கள் பரிசீலிலனை செய்து முடிவுகள் அறிவிக்கப்பட்டு வருகிறது. இன்று ஒரே நாளில் மட்டும் சென்னை மாநகராட்சியில் 12 இடங்களில் முகாம்கள் நடைபெற்று வருகிறது. அந்த வகையில் இன்று மண்டலம் 10, வார்டு எண் 140 இல் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த முகாமினை பார்வையிட்டு ஆய்வு செய்துள்ளோம்.

**எடப்பாடி பழனிசாமி தொடர்பான கேள்வி**

எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் சொல்கின்ற எந்த செய்தியாக இருந்தாலும் அவர் சொல்வதற்கும், செய்வதற்கும் சம்மந்தம் இல்லாமல் பேசி வருகிறார். இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு முதலமைச்சர் அவர்களின் அதிதீவிர நடவடிக்கைகளின் காரணமாக பொருளாதார வளர்ச்சி என்பது 14 ஆண்டுகளுக்கு பிறகு இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சி பெற்றிருக்கிறது.

2010--11-இல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமை ச்சராக இருந்தபோதுதான் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி 13.12% இருந்தது. அதனைத் தொடர்ந்து 14 ஆண்டு காலம் ஓரிலக்க வளர்ச்சியாக இருந்து வந்தது. இன்றைக்கு இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 6.5% முதலமைச்சராக முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்று செயல்படுத்திக் கொண்டிருக்கும் திட்டங்கள் காரணமாக செயலாற்றிக் கொண்டிருக்கும் பணிகள் காரணமாக ஏற்பட்டிருக்கும் பொருளாதார வளர்ச்சி என்பது 11.19% இந்த வளர்ச்சி ஒன்றிய அரசின் வளர்ச்சியைக் காட்டிலும் இரு மடங்கு கூடுதல்.

இன்று ஏராளமான பேர் குதர்க்கம் பேசி வருகிறார்களே, குஜராத், கோவா போன்ற மாநிலங்கள் இந்த வளர்ச்சி பட்டியலில் இடம் பெறவே இல்லை. இந்த நிலையில் தமிழ்நாடு ஈரிலக்க வளர்ச்சி பெற்றுள்ளது. இதுகுறித்து பெருமைப்பட வேண்டும். நம்மால் முடியாததை ஸ்டாலின் செய்து வருகிறாரே என்று மார்த்தட்டி கொள்ள வேண்டும். அந்த பெருந்தன்மை எல்லாம் எடப்பாடி பழனிசாமி அவர்களுக்கு வராது.

**பாம்புக்கடி, நாய்க்கடி தொடர்பான கேள்வி**

பொதுவாக நாய்க்கடிகளினால் ஏற்படும் தொல்லைகள் குறித்து அரசு கூர்ந்து கவனித்து வருகிறது. முதலமைச்சர் அவர்களின் தலைமையிலேயே இதுவரை தமிழ்நாட்டின் வரலாற்றின் எப்போதும் இல்லாத வகையில் நாய்க்கடி பிரச்சினைகளுக்கு தனி ஆய்வுக் கூட்டம் நடத்தி, முதல்வர், துணை முதல்வர் சம்மந்தப்பட்ட துறைகளின் அமைச்சர்கள், அனைத்து அரசுச் செயலாளர்கள் உள்ளிட்டவர்களுடன் பேசி நாய் இனப் பெருக்கத்தினை எப்படி குறைப்பது போன்ற பல்வேறு கூட்டங்களின் வாயிலாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

அதோடு மட்டுமல்லாமல் மக்கள் நல்வாழ்வுத்துறையைப் பொறுத்தவரை இதற்கு முன்னாள் மக்கள் நல்வாழ்வுத்துறை உருவானதிலிருந்தே நாய்க்கடி, பாம்புக்கடிக்கான மருந்து என்பது வட்டார அளவிலான மருத்துவமனைகளிலும், மாவட்ட அளவிலான மருத்துவமனைகளிலும் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் மட்டுமே இருந்தது. முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாட்டில் இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையங்கள், நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் என்று 2,236 ஆரம்ப சுகாதார நிலையங்களில் நாய்க்கடிக்கு ARV என்கின்ற மருந்தும், பாம்புக்கடிக்கு ASV என்கின்ற மருந்தும் இருப்பு வைக்கப்பட்டு, அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களின் நுழைவு வாயில்களிலும் பாம்புக்கடி, நாய்க்கடி மருந்துக்கான கையிருப்பு அளவு விளம்பரமும் செய்யப்பட்டிருக்கிறது.

பாதுகாப்பான சூழல் என்பது நாய்க்கடிக்கும், பாம்புக்கடிக்குமான மருந்துகளில் தமிழ்நாடு இன்றைக்கு முதலிடத்தில் இருக்கின்றது என்று ஒன்றிய அரசின் மக்கள் நல்வாழ்வுத்துறை பல முறை சொல்லியிருக்கின்றது என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர் எம். ஸ்ரீதரன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தமிழ் மின் நூலகத்தில் – கணித மேதை

# சீனிவாச இராமானுஜனின் கையெழுத்துப் பிரதிகள் பதிவேற்றம்!

## அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் தகவல்!

சென்னை, செப்.26

சென்னைப் பல்கலைக்கழக நூலகத்தில் நீண்ட காலமாகப் பாதுகாத்து வைக்கப்பட்டிருந்த கணித மேதை சீனிவாச இராமானுஜனின் கையெழுத்துப்படிகள், முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டுதலின்படி, மின்பதிப்பா க்கம் செய்யப்பட்டு, தமிழ் மின் நூலகத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன (https://tamildigitallibrary.in) என்று தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல்சேவைகள் துறைஅமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் தெரிவித்துள்ளார்.



சீனிவாச இராமானுஜனின் கையெழுத்துப் படிகள், 3 தொகுதிகளில் ஏறத்தாழ 700 பக்கங்களாக, இதில் இடம்பெற்றுள்ளன. சென்னை ஐ.ஐ.டி நிறுவனத்தின் கணிதத்துறைப் பேராசிரியர் இராகேஷ் கண்ணா, கையெழுத்துப் படிகளைப் பார்வையிட்டு, இப்படிகளுக்கென அறிமுகக் குறிப்பை எழுதியுள்ளார்.

தமிழ் இணையக் கல்விக் கழகத்தை முத்தமிழறிஞர் கலைஞர் 2001 பிப்ரவரி 17 அன்று தொடங்கி வைத்தார். அதன்கீழ் செயல்படும் தமிழ் மின் நூலகம் 2017 அக்டோபர் 11 அன்று பயன்பாட்டிற்கு வந்தது. கலை, இலக்கியம், அறிவியல், வரலாறு, மருத்துவம், உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சார்ந்த அரும்பெரும் நூல்களும், பருவ இதழ்களும், ஓலைச்சுவடிகளும் தமிழ் மின் நூலகத்தில் பதிவேற்றப்பட்டுள்ளன.

ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட நூல்கள், பருவ வெளியீடுகள், 8 லட்சத்திற்கும் மேற்பட்ட ஓலைச்சுவடிப் பக்கங்கள் இதுவரை மின்பதிப்பாக்கம் செய்யப்பெற்றுள்ளன. இம்மின் நூலகம் 17 கோடிக்கும் மேற்பட்ட பார்வைகளைப் பெற்றுள்ளது.

அண்மையில் தகவல் தொழில்நுட்பரீதியாக மேம்படுத்தப்பட்டுள்ள தமிழ் மின் நூலக உள்ளடக்கங்களில் ஒளிப்படங்கள், ஒலித் தொகுப்புகள், காணொலிகள், நிலவரைபடங்கள், தொல்லியல் தொடர்பான தகவல்கள் ஆகியவையும் புதிதாகப் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. ஒரு பல்லூடகப் பயன்பாட்டுப் பெட்டகமாக மின் நூலகம் உருமாற்றப்பட்டுள்ளது. தமிழ், பிராமி, வட்டெழுத்து, கிரந்தம் மற்றும் பிற மொழிகளில் உள்ள கல்வெட்டுகள் பற்றிய தகவல்கள் இடம்பெற்றுள்ளன.

மின் நூலகத்தில் உள்ள உள்ளடக்கங்கள் தொடர்ந்து புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. அரிய நூல்கள், ஆவணங்கள் தொடர்ந்து சேகரிக்கப்பட்டு எழுத்தாளர் விவரம் உள்ளிட்ட குறிப்புகளுடன் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு அரசின் அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்பட்டுவந்த மகாகவி பாரதியாரின் கையெழுத்துப் பிரதிகள், செப்டம்பர் 11 அன்று, அவரது நினைவு நாளை ஒட்டி மின்பதிப்பாக்கம் செய்யப்பட்டுள்ளன. அந்த வகையில் தற்போது, கணித மேதை சீனிவாச இராமானுஜனின் கையெழுத்துப் பிரதிகள் (*Hypergeometric Series, continued fractions, qseries, theta functions, Master Theorem for the evaluation of integrals, etc.,*) மின் நூலகத்தில் ஒரு தனித் தொகுப்பாகப் பதிவேற்றம்பெற்றுள்ளன.

சீனிவாச இராமானுஜனின் கையெழுத்துப் பிரதிகள் மின் பதிப்பாக்கம் செய்யப்பெற்று பதிவேற்றம் பெற்றதில் பங்குவகித்த ஆய்வாளர்களுக்கும் அலுவலர்களுக்கும் தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துள்ளார்.

## ஆவடியில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம்!

# செயற்கை கால் தசை சிதைவு நோயால் பாதிக்கப்பட்டவருக்கு வீல் சேர்!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் வழங்கினார்!

திருவள்ளூர் செப் ;25

உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் திருவள்ளூர் மாவட்டம் ஆவடி தொகுதிக்குட்பட்ட ஆவடி மாநகராட்சி திருமுல்லைவாயில் சோழமேடு உள்ள தனியார் மண்டபத்தில் நடைபெற்றது.

சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சாமு.நாசர் தொடங்கி வைத்து ஆய்வு மேற்கொண்டார். அப்பொழுது தசை சிதைவு நோயினால் பாதிக்கப்பட்ட வசந்தி என்பவர் தனக்கு வீல் சேர் கேட்டு விண்ணப்ப படிவத்தை நிரப்பி கொடுத்தார். விண்ணப்பம் கொடுத்த அடுத்த சில மணி நேரங்களில் வீல் சேர் அவருக்கு வழங்கப்பட்டது. விண்ணப்பித்த தினமே தனக்கு வீல் சேர் கொடுத்த முதலமைச்சர் ஐயா அவர்களுக்கும், அமைச்சர் சாமு நாசர் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என கூறினார். பின்னர் சாலை விபத்தில் தனது இடது காலை இழந்த அகிலேஷ் என்பவர் கடந்த ஜூலை மாதம் உங்களுடன் ஸ்டாலின் முகாமில் செயற்கைக் கால் கோரி விண்ணப்பித்தார். விண்ணப்பித்த இரண்டு மாதங்களில் செயற்கை காலானது வழங்கப்பட்டது. சேர்க்கை கால் வாங்குவது தன்னைப் போன்ற ஏழைக்கு எட்டாக் கனியானது. உங்களுடன் ஸ்டாலின் திட்டம் முகாமில் விண்ணப்பித்து இரண்டு மாதங்களிலேயே எனக்கு செயற்கை கால் வழங்கிய முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்களுக்கும் தமிழ்நாடு துணை முதல்வருக்கும் மாற்றுத்திறனாளி துறைக்கும் அமைச்சர் ஆவடி சாமு. நாசருக்கும் நெஞ்சார்ந்த நன்றி என கூறினார்.

இந்நிகழ்ச்சியில் ஆவடி மாநகராட்சி ஆணையர் சரண்யா ஐஏஎஸ் ,ஆவடி மாநகராட்சி மேயர் உதயகுமார், மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் சீனிவாசன், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், பகுதி கழக செயலாளர்கள் பேபிசேகர், ஜி.ராஜே ந்திரன், ஜி.நாராயண பிரசாத், மற்றும் அரசு துறை அதிகாரிகள் கழக நிர்வாகிகள் கவுன்சிலர்கள் கலந்து கொண்டார்கள்

**கழக சட்டதிட்ட விதி:18, 19-ன் படி,**

**தி.மு.க. சட்டதிட்டத் திருத்தக்குழுத் தலைவர் நியமனம்!**

**தலைமைக் கழக அறிவிப்பு**

கழக சட்டதிட்ட விதி:18, 19–ன் படி, தி.மு.க. சட்டதிட்டத் திருத்தக்குழு தலைவராக திரு.**எஸ்.கல்யாணசுந்தரம், எம்.பி.**, (293, வன்னியர் தெரு, பம்பப்படையூர் அஞ்சல், கும்பகோணம் வட்டம், தஞ்சை மாவட்டம். ) அவர்கள் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்படுகிறார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை – 18.
நாள்: 25.09.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.





கடம்பத்தூர் கிழக்கு ஒன்றியம் பாப்பரம்பாக்கம் ஊராட்சியில் கொப்பூர், புதுவள்ளூர், வெள்ளேரி தாங்கல், பாப்பரம்பாக்கம் ஊராட்சிகளுக்கான உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. இராஜேந்திரன் பங்கேற்று பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கை மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என துறை சார்ந்த அலுவலர்களிடத்தில் கேட்டுக்கொண்டார் . இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவை தலைவர் க. திராவிட பக்தன், கடம்பத்தூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் கே.அரிகிருஷ்ணன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் என். நந்தகோபால், வி. எஸ். நேதாஜி, வட்டார வளர்ச்சி அலுவலர் நடராஜன், ஒன்றிய கழக நிர்வாகிகள் கொப்பூர் டி. திலீப்குமார், சி. ஆர். குமரன், செங்குட்டுவன், வி. குமார், மங்காத்தாகுளம் ரவி, மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் ஆர்.வாசு, ஏ. பெருமாள், சதீஷ், பாஸ்கர், தகவல் தொழில்நுட்ப அணி மகேஷ் குமார், கிளை கழக செயலாளர்கள் உமாபதி, ராமு, மகா, ஜெய்கிருஷ்ணன், எம்.கார்த்திக், ராம்கி, எச்.மோகன், சுதாகர், நித்யானந்தம், டி.மதியழகன், சந்திரன், இ. நீலமேகம், சுந்தரமூர்த்தி, உத்திரகுமார், நடராஜன், உள்ளிட்ட வருவாய் துறை அலுவலர்கள், ஊரக வளர்ச்சி துறை அலுவலர்கள், சுகாதாரத் துறை அலுவலர்கள், ஏராளமான பொதுமக்கள் பங்கேற்றனர்.